UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# திருவிளையாடற் புராணங்கள் காட்டும் நவமணி இலக்கணம்

**சே. சக்திவேல்,**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர் 641020

**முனைவர் தே. ராஜகுமார்**
(நெறியாளர்) உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

## ஆய்வு நோக்கம்

மதுரைக்குரிய தலபுராணங்களுள் திருவிளையாடற் புராணம் எனும் பெயரில் அமைந்த நூல்கள் இரண்டு. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் என்பது காலத்தால் முற்பட்டது. இதைப் பாடியவர் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பார். மற்றொன்று பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணம். இவ்விரண்டிலும் அமைந்துள்ள மாணிக்கம் விற்ற திருவிளையாடலிலும் மாணிக்கம் விற்ற படலத்திலும் நவமணிகள் பற்றிய அரிய செய்திகள் உரைக்கப்பெற்றுள்ளன. அவற்றை ஆய்ந்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## தொன்மச்சூழல்

மதுரையில் வீற்றிருக்கும் சொக்கநாதக் கடவுள் செய்த அறுபத்துநான்கு திருவிளையாடல் களை (அற்புதங்களை) எடுத்துரைக்கும் நோக்கில் எழுந்தனவே திருவிளையாடற் புராணங்கள். இத்திருவிளையாடல்களில் ஒன்றே சொக்கநாதர் வணிகரைப் போல வந்து மாணிக்கம் விற்ற நிகழ்வு. பாண்டியமன்னன் ஒருவனுக்குக் காதல் மனைவியர் வயிற்றில் தோன்றிய புதல்வர்கள் பலர் இருந்தனர். ஆனால் குலமாதர் வயிற்றில் புதல்வர் எவரும் தோன்றாததால் வருந்திச் சொக்கநாதரிடம் முறையிட்டான். அவர் அருளால் குலமங்கை வயிற்றில் ஒருமகன் பிறந்தான். அவன் பட்டத்துக்குரிய தகுதிபெற்றவனானான்.

இச்சூழலில் வேட்டைக்குச் சென்ற மன்னன் புலியால் உயிரிழந்தான். இதையறிந்த காதல் மனைவியர் மக்கள் கருவூலத்திலிருந்த செல்வத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு ஓடிப் போயினர். பட்டத்து இளவரசனை அமைச்சர் முதலியோர் பாதுகாத்து, அவனுக்கு முடிசூட்ட எண்ணிக் கருவூலத்தில் மணிமுடியைத் தேடிப் பார்க்க எல்லாம் கொள்ளை போயிருந்ததை அறிந்து வருந்தினர். பொன் கிடைத்தாலும் மகுடத்தில் பதிப்பதற்கேற்ற சிறந்த நவமணிகளுக்கு எங்கே போவது? என வருந்தியபொழுது சொக்கரே மாணிக்கம் விற்கும் வணிகர் போல வந்து, தம்மிடம் சிறந்த மணிகள் இருப்பதாகச் சொல்லிக் காட்ட, அமைச்சர்கள் மகிழ்ந்து அவற்றின் தோற்றம், குற்றம், குணம் முதலியவற்றை எடுத்துரைக்குமாறு வேண்டினர். அப்போது இறைவன் அவர்கள் கேட்டவற்றை எல்லாம் விரித்துரைக்கிறார். இப்பகுதியில்தான் நவமணிகளின் வரலாறு இடம்பெற்றுள்ளது.

### நவமணிகளின் தோற்றம்

வலன் எனும் அசுரன் ஒருவன் தவம் செய்து சிவபெருமானிடம் போரில் தன்னை எவரும் வெல்லமுடியாத வரத்தையும் ஊழ்வினையால் இறந்தால் தன்னுடல் துறவோரும் விரும்பும் நவமணிகள் ஆகவேண்டும் என்னும் வரத்தையும் பெற்றான். வரம் பெற்ற வலன் இந்திரனைப் போரில் வென்றபோது செருக்கினால் இந்திரனுக்கு வரம் கொடுக்க முற்பட்டு, இந்திரன் கேட்ட வரத்தின்படி வேள்விப்பசுவாகி உயிரை விட்டான். வேள்வியில் இட்டது போக எஞ்சிய அவன் உடல்பாகங்களே நவமணிகள் ஆயின என்று அவற்றின் தோற்றம் பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. (பா.எண். 1212 முதல் 1228 வரை) நம்பி திருவிளையாடற் புராணம் ஒரே பாடலில் இவ்வரலாற்றை மிகச்சுருக்கமாகச் சொல்லுகின்றது (பா.எண். 464).

வலனின் எலும்பு வைரமாகவும் இறைச்சி பவளமாகவும் கருவிழி நீலமாகவும் கபம் புருடராகமாகவும் இரத்தம் மாணிக்கமாகவும் மயிர் வைடூரியமாகவும் கொழுப்பு கோமேதக மாகவும் பல் முத்தாகவும் பித்தம் மரகதமாக வும் மாறின (ந.தி.பா.எண்.465, ப.தி. பா.எண். 1228)

### மாணிக்கம்

மாணிக்கம் ஒன்பது வகையான நிறங்கள் கொண்டது. இதற்குக் கமலராகம், பத்மராகம் எனும் பெயர்களுமுண்டு. இது செந்தாமரை மலர், மாதுளம்பூ, மாதுளம் விதை, நெருப்பு, செங்குவளை மலர், மின்மினிப்பூச்சி, நாரத்தம் பழம், விளக்கு, இந்திரகோபப்பூச்சி எனும் நிறங்களையுடைய ஒன்பது வகைப்படும். இது ஒவ்வொரு யுகத்திலும் முறையே மக்கம், காளபுரம், தும்புரம், சிங்களம் ஆகிய இடங்களில் தோன்றும் என்று பரஞ்சோதி முனிவர் குறிப்பிட (பா.எண்.1230) நம்பி பொதுவாக, வலவை, மாவலிகங்கை, கம்பளை, கல்லணை ஆகிய இடங்களில் மாணிக்கம் கிடைக்கும் என்கிறார் (பா.எண். 467). இவை இலங்கையிலுள்ள சமனொளி மலையில் தோன்றும் ஆறுகளாகும். இம்மணி நான்கு வகைப்படும். அவற்றை நம்பி, கோமளம், குருவிந்தம், பதுமராகம், பணா மணி (நாகமாணிக்கம்) என்பார். பரஞ்சோதி முனிவர் அவற்றைச் சாதரங்கம், குருவிந்தம், சௌகந்திகம், கோவளங்கம் என்று குறிப்பிடு வார். இவை ஒவ்வொன்றுக்கும் உரிய நிறங்கள் முறையே பத்து, எட்டு, ஆறு, நான்காம் (ப.தி. பா.எண்.1231).

சாதரங்கம் தாமரைமலர், கருநெய்தல் மலர், சூரியவொளி, நெருப்பு, மின்மினி, மாதுளம்பூ, அதன் விதை, மேகம், விளக்கு, இந்திர கோபம் எனப் பத்து நிறங்கள் கொண்டது. குருவிந்தம் குன்றிமணி, முயலின் குருதி, வெள்ளலோத்தமலர், பலாசமலர் (புரசை மலர்), மஞசாடிமலர், செம்பருத்திப்பூ, முள்ளிலவமலர், உருக்கிய பொன் என எட்டு நிறங்களையுடையது. சௌகந்திகம் இலவம்பூ, குயிலின் கண், அசோகந்தளிர், ஒளிரும்பொன், செம்பஞ்சி, மருதோன்றிமலர் எனும் ஆறு வண்ணங்கள் கொண்டது. கோவாங்கம் குராமலர், குசும்பைமலர், செங்கல், கோவைப்பழம் என்னும் நான்கு நிறங்களையுடையது. (ப.தி. பா.எண்.1232, 1233). மாணிக்கத்துக்குப் பன்னிரண்டு குணங்களும் பதினாறு குற்றங்களும் உண்டு. குற்றமற்றதும் குணமுடையதுமான மாணிக்கத்தையே அணியவேண்டும். மற்ற மணிகளுக்கும் இவ்விதி பொருந்தும் (ந.தி. பா.எண்.466) சாதரங்கம் அணிவோர் கல்வி, பசு, கன்னி, அறுசுவையன்னம் முதலிய தானபலனையும் அசுவமேத வேள்வி செய்த பலனையும் அடைவர். குருவிந்தம் அணிபவர்கள் அரசபோகம் நுகர்வார்கள். சௌகந்திகம் தரிப்போர் செல்வத்தையும் புகழையும் பெறுவர். கோவாங்கம் தரிப்பவர் வீட்டில் பாலும் மலைபோன்ற பண்டங்களும் நிறைந்திருக்கும். (ப.தி. பா.எண்.1234,1235).

### முத்து

முத்து இரண்டு வகைப்படும். ஒன்று நிலத்தில் தோன்றுவது. இது தலசம் எனப்படும். மற்றொன்று நீரில் தோன்றுவது. இது சலசம் எனப்படும். முத்துப் பிறக்கும் இடங்கள் பதின்மூன்று. அவையாவன, சங்கு, கருமேகம், மூங்கில், பாம்பின் தலை,

பன்றிக்கொம்பு, வெண்நெல், சிப்பி, மீன் தலை, வேழக்கரும்பு, யானைத்தந்தம், சிங்கத்தின் கை, கற்புடைய மகளிர் கழுத்து, கொக்கின் கழுத்து (ப.தி. பா.எண். 1246, 1247). நம்பி இவற்றுள் சிங்கத்தின் கையினுக்கு வேறாகக் காகவாகனர் திண்தோளினைக் கூறுகிறார் (பா.எண்.471) முத்துக்குப் பத்துக் குற்றங்களும் ஆறு குணங்களும் உண்டு.

சிப்பியும் சங்கும் ஈன்ற முத்துகள் வெண்ணிறத்தன; மேகம் ஈன்றது சிவந்த சூரியனை ஒத்தது; மூங்கிலில் தோன்றிய முத்து ஆலங்கட்டியின் நிறமுடையது; பாம் பீன்ற முத்து நீலவண்ணங் கொண்டது; பன்றிக்கொம்பில் பிறந்தது குருதி நிறமுடையது; நெல்லில் பிறந்தது பசுமைவண்ணமுடையது; மீன்தலை முத்து பாதிரிமலரைப் போன்றது; கரும்பிலும் யானைக் கொம்பிலும் தோன்றும் முத்துகள் பொன்னிறம் கொண்டவை. வெண்ணிற முத்துகளுக்குத் தெய்வம் வருணன். செந்நிற முத்துகளுக்குச் சூரியனும் நீல முத்துகளுக்குத் திருமாலும் இரத்த நிறமுடைய முத்துகளுக்கு வாயுதேவனும் பசுமைநிறமுடைய முத்துகளுக்கு இயமதருமனும் பொன்னிற முத்துகளுக்கு இந்திரனும் தெய்வங்கள் ஆவர் (ப.தி. பா. எண். 1250)

**வைரம்**

ததீசி முனிவர் எலும்பும் வலாசுரன் எலும்பும் விழுந்த கோசலம் முதலிய நாடுகளில் வைரம் தோன்றும். இதற்குப் பன்னிரு குற்றங்களும் ஐந்து குணங்களும் உண்டு. நவமணிகளுள் வைரமே முதன்மையானது. இதைக் கொண்டே பிறமணிகளைத் துளையிடுவர்; வைரத்தைக் கொண்டே வைரத்தையும் துளையிடுவர். (ப.தி. பா.எண்.1254)

**நீலம்**

நீலமணியானது, குயிற்கழுத்து, நீலோற்பலம், வண்டு, ஆகுலக்கண், கரிய மேகம், அவிரிச் சாறு, பூவைமலர், நெய்தல் மலர் எனும் எட்டு நிறங்கள் கொண்டது. (ந.தி. பா.எண்.474) இது இந்திரநீலம், மாநீலம் என இருவகைப்படும். (ப.தி.பா.எண்.1262) இந்திர நீலம் சிவபெருமானின் நீலகண்டம் போல விளங்கும். இதன் குற்றங்கள் எட்டாகும்.

**மரகதம் (பச்சை)**

மரகதம் கருடப்பச்சை எனவும் பெயர் பெறும். இதற்குக் காடம், சுப்பிரம், காளம் எனக் குணம் மூன்றாகும். காடம் அறுகம்புல்லின் நிறமுடையது; இது சகுணம், சதோடம் என இருவகைப்படும். சகுணம் காடத்தோடு, உல்லசிதம், பேசலம், பித்தகம், முத்தம், பிதுகம் என ஆறுவகைப்படும். காடம் புல்லின் நிறத்தையும் உடல்லசிதம் மென்மையையும் பேசலம் குளச் செந் நெல்லில் தோன்றிய முத்தின் வண்ணத்தையும் (பசுமை) பித்தகம் பச்சைக்கிளியின் சிறகையொத்த நிறத்தையும், முத்தம் துளசியிலையின் நிறத்தையும் கொண்டு விளங்கும். சதோடமானது, தோடலேசாஞ்சிதம், துட்டம், தோடமூர்ச்சிதம், தோடலேசம், மந்ததோடம் என ஐந்தாகும். இவற்றுள் தோடலேசாஞ்சிதம் எலுமிச்சையிலை நிறமும் துட்டம் அரளியிலை வண்ணமும் கருங்குவளைப் பூவிதழின் வண்ணமும் கொண்டிருக்கும். தோடமூர்ச்சிதம் புல்லின் நிறமும் தோடலேசம் தாமரையிலையின் நிறமும் மந்ததோடம் மயிலிறகின் நிறமும் கொண்டு ஒளிரும். (ப.தி. பா.எண்.1259 முதல் 1260 வரை) இதன் குற்றம் எட்டாகும்.

**பவளம்**

பவளத்தின் நிறங்களாவன, சிந்துரம், ஈச்சங்காய், செம்மண், தூதுவளைக்கனி, முசுமுசுக்கைக் கனி, வீரைக்கனி என்பவற்றின் நிறங்களாம். இதன் குற்றங்கள் மூன்று. (ந.தி.பா.எண்.475) இதன் நிறங்களைப் பரஞ்சோதி முனிவர், முருக்கம்பூ, கிளிமூக்கு, செம்பருத்திப்பூ, கோவைக்கனி ஆகியவற்றின் நிறங்களை ஒத்ததாகக் கூறுகிறார் (பா.எண்.1274).

**கோமேதகம்**

உருக்கிய நெய்த்துளீ, தேன்துளி, நல்ல பசுவின் கோசலம் ஆகியவற்றை ஒத்துச் சிவந்து, பொன்னிறத்தையும் பெற்று (செம்மையும் வெண்மையும் கலந்த நிறம்) மென்மையும் தூய்மையும் திண்மையும் கொண்டது

கோமேதகம் (ப.தி.பா.எண்.1268). வைடூரியத்தின் மேல் தேன்துளி விழுந்தால் எப்படியிருக்குமோ அதைப் போன்றது கோமேதகத்தின் நிறம் என்பார் நம்பி. புருடராகம், வைடூரியம், கோமேதகம் மூன்றும் மும்மணி எனப்படும். இவற்றிலிருந்து தோன்றியவையும் உண்டு. அவை தோராவல்லி, கனகதோராவல்லி முதலியன. (ந.தி. பா.எண்.476,477).

### புருடராகமும், வைடூரியமும்

புருடராகம் செம்பொன்னும் நெருப்பும் போன்ற நிறமுடையது. (ப.தி. பா.எண்.1269) செம்பொன், வண்டின் வயிறு, ஒழுகும் தேன் என்பவற்றின் நிறங்கொண்டது என்பார் நம்பி. வைடூரியம், பொன்மேல் முலைப்பால் ஒழுகுவதைப் போன்ற நிறமுடையது என்பார் நம்பி (பா.எண்.476). இதன் நிறம், மூங்கில் இலை, மயில்கழுத்து, பூனையின் கண் என மூவகைப்படும். சான்றோர் இதனை நாள் தோறும் பூசித்து அணிவது சிறப்பு (ப.தி. பா.எண்.1272).

மாணிக்கம், முத்து, வைரம், மரகதம், நீலம் எனும் ஐந்தும் மேலானவை. விலைமதிப்பு மிக்கவை. கோமேதகம், புருடராகம், வைடூரியம், பவளம் ஆகிய நான்கும் மிகுந்த ஒளியுடையவை என்றாலும் விலை குறைந்தவை. வைரத்தையும் கடலில் தோன்றிய முத்தையும் அந்தணர் சாதி என்றும் பவளத்தையும் மாணிக்கத்தையும் அரசர் சாதி என்றும் புருடராகம், வைடூரியம், கோமேதகம் ஆகிய மூன்றையும் வணிகர் சாதி என்றும் நீலத்தையும் மரகதத்தையும் நான்காம் வருணம் என்றும் கூறும் மரபுண்டு. (ப.தி. பா.எண்.1239). இதேபோல யாப்பிலக்கணத்திலும் வெண்பாவை அந்தணர் பா என்றும் அகவற்பாவை அரசர் பா என்றும் கலிப்பாவை வணிகர் பா என்றும் வஞ்சிப்பாவை வேளாளர் பா என்றும் கூறும் மரபுண்டு. (யா.கா.பா.எண்.85) உருத்திராக்க மணிகளில் வெண்ணிற மணிகள் அந்தணர்க்கு உரியவை என்றும் செந்நிறம் அரசர்க்கு உரியவை என்றும் பொன்னிறம் வணிகர்க்கு உரியவை என்றும் கருநிறம் பின்னவர்க்கு உரியவை என்றும் கூறுவர் (உருத்திராக்க விசிட்டம், பா.எண்.23). ‘வெண்மை முதலிய நிறம் பற்றி வைரம் முதலியவற்றை அந்தணர் முதலிய சாதியுள்படுத்துக் கூறுவது புனைந்துரை வகை ஆயதோர் வழக்கு’ – என்று இதற்கு விளக்கம் கூறுவர் அறிஞர். (ப.தி. பா.எண்.1239 – இன் உரை). நவமணிகளின் தோற்றம் பற்றிய பிற வரலாறுகள், அவற்றை அணிவோர் அடையும் விசேட பலன்கள், அவற்றை ஆராய ஏற்ற நாட்கள், ஆராயும் முறை, பூசிக்கும் முறை முதலியவற்றையும் திருவிளையாடற் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. சிலப்பதிகாரம், கல்லாடம், பழைய உரைகள் முதலியவற்றால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் நவமணிகள் பற்றித் தெளிவாக அறிந்து வைத்திருந்தனர் என்பது புலப்படுகிறது. நவமணிகளின் இலக்கணம் கூறும் செய்யுள் வடிவ நூல்களும் இருந்துள்ளன என்பதை உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள்களால் அறிய முடிகிறது. தமிழகத்தில் குறிப்பாகக் கோயில்களில் மரகதம், நீலம், கோமேதகம் முதலியவற்றாலான சிவலிங்கங்கள் இன்றும் பூசையில் உள்ளன. இதேபோல நவரத்தினங்கள் பதித்த ஆபரணங்களும் தமிழ்நாட்டுக் கோயில்களில் இருப்பதைப் போல வேறெங்கும் காணக்கிடைக்காது. இவையெல்லாம் தமிழர் வாழ்வியலிலும் பண்பாட்டிலும் நவமணிகள் பெற்றிருக்கும் செல்வாக்கை உணர்த்துவனவாய் உள்ளன.

### துணைநூற் பட்டியல்

1. உருத்திராக்க விசிட்டம் – சிதம்பரம் மறைஞான சம்பந்தர் – திருவாவடுதுறை ஆதீனம், முதற்பதிப்பு-2025
2. திருவாலவுடையார் திருவிளையாடற் புராணம், பெரும்பற்றப்புலியூர் நம்பி, பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை, முதற்பதிப்பு-1906
3. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரை), முல்லை நிலையம், சென்னை. முதற்பதிப்பு-2007
4. யாப்பருங்கலக்காரிகை, அமுதசாகரர், கதிர் பதிப்பகம், திருவையாறு. முதற் பதிப்பு